# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2051 / சார்வாரி ஆண்டு புரட்டாசி மாதம் / செப்டம்பர் 2020

SMART SELANGOR


# மக்கள் சுபிட்சத்திற்கு மேம்பாட்டு திட்டங்கள்

## சுல்தான் உத்தரவு

நீர் விவகாரம் தொடர்பில் சிலாங்கூர் சுல்தான் அவர்களுக்கு மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி விளக்கமளிக்கிறார்

சிலாங்கூர் மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டு திட்டங்கள் மாநில மக்களுக்குச் சுபிட்சத்தைத் தரும் வகையில் இருக்க வேண்டும் என்று சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா வலியுறுத்தினார்.

இ.சி.ஆர்.எல். எனப்படும் கிழக்கு கரை இரயில் திட்டத்தின் தடம் மாற்றப்படுவது தொடர்பில் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியிடம் விளக்கம் பெற்ற போது அவர் இதனைக் கூறினர்.

கோம்பாக் பகுதியில் உள்ள பாரம்பரியக் கிராமங்கள், பூர்வகுடியினர் குடியிருப்புகள், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள், நீர் பிடிப்பு பகுதிகள் மற்றும் நீர்த் தேக்கங்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

மக்களின் நலனைப் பாதுகாப்பதற்கு ஏதுவாக அனைத்து மேம்பாட்டு திட்டங்களிலும் மேற்கண்ட அம்சங்களைக் கவனத்தில் கொள்ளுமாறு சுல்தான் கேட்டுக் கொண்டார் எனச் சிலாங்கூர் அரச அலுவலகத்தின் முகநூலில் வெளியிடப்பட்ட அறிக்கை கூறியது.

இந்தக் கிழக்கு கரை இரயில் திட்டத்திற்காக ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்ட தடத்திற்கு ஒப்புதல் அளிக்க மாநில அரசு கடந்த ஜூலை மாதம் மறுப்பு தெரிவித்திருந்தது.

நீர் பிடிப்பு பகுதிகளின் ஊடாகக் கோம்பாக் மற்றும் செரெண்டா நகரங்களைக் கடந்து செல்லும் வகையில் அந்த இரயில் தடம் அமைந்திருந்தது.

அந்தத் தடத்திற்கு மாற்றாக ஜென்ஜாரோம், ரிம்பாயு, வெஸ்ட் போர்ட் பகுதிகளை மாநில அரசு பரிந்துரை செய்திருந்தது.

## எதிர்பாராத சூழ்நிலைகளைச் சமாளிக்கக் கூடுதல் நீர் சுத்திகரிப்பு மையங்கள்

கோலாலம்பூர், செப் 6- எதிர்பாராத வகையில் ஏற்படும் நீர் தட்டுப்பாடு பிரச்னைகளின் போது சுங்கை சிலாங்கூரில் உள்ள மூன்று நீர் சுத்திகரிப்பு மையங்களை மட்டுமே சார்ந்திருப்பதைத் தவிர்ப்பதற்காக அண்மைய ஆண்டுகளில் கூடுதலாக நீர் சுத்திகரிப்பு மையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருப்பதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

அந்த நீண்டகால திட்டத்தின் வழி சேவைத் தரத்தை மேம்படுத்த முடிந்ததோடு பயனீட்டாளர்களுக்குச் சுத்தமான நீரை விநியோகிக்கவும் முடிந்ததாக அவர் சொன்னார்.

லபோஹான் டாகாங் நீர் சுத்திகரிப்பு மையத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணிப்புத் திட்டத்திற்கு நாம் தயாராகிவிட்டோம். முன்பு சுங்கை சிலாங்கூர் சுத்திகரிப்பு மையத்தில் பிரச்னை ஏற்படும் பட்சத்தில் லங்காட் சுத்திகரிப்பு மையத்தை மட்டும் நாம் நம்பியிருந்தோம் என்றார். நாளொன்றுக்கு ஐந்து கோடி லிட்டர் நீரை விநியோகிக்கும் ஆற்றலை லபோஹான் டாகாங் நீர் சுத்திகரிப்பு கொண்டுள்ளது. சுங்கை சிலாங்கூர் மையம் பிரச்னையை எதிர்நோக்கும் போது கோல லங்காட் மாவட்டத்தின்



பெரும் பகுதிக்கு லபோஹான் டாகாங் மையத்தால் நீர் விநியோகம் செய்ய முடியும் என்று அவர் மேலும் சொன்னார்.

லங்காட் 2 திட்டத்தின் வாயிலாகத் தினசரி 40 கோடி முதல் 50 கோடி லிட்டர் வரையிலான நீரை விநியோகிக்க முடியும் என்றும் அமிருடின் தெரிவித்தார்.

சுங்கை ராசாவ் நீர் சுத்திகரிப்பு மையத்தின் கட்டுமானப்பணிகள் அடுத்தாண்டு அல்லது 2022 இல் முற்று பெறும் எனக் கூறிய அவர், நீர் விநியோகத் தடை ஏற்படும் பட்சத்தில் கிள்ளான் வட்டார மக்களுக்கு இம்மையத்தின் மூலம் நீரை விநியோகிக்க முடியும் என்று அவர் கூறினார்.

ஆண்டுடொன்றுக்கு 150 கிலோமீட்டர் நீளத்திற்குக் குழாய்களை மாற்றும் திட்டத்தை மேற்கொள்வதன் வாயிலாகக் குழாய் உடைப்பின் காரணமாக வீணாகும் நீரின் அளவை குறைக்க முடியும் என்றும் அவர் சொன்னார்.

# சுங்கை கோங் ஆற்றை மாசுபடுத்தியதாக ஐவர் மீது குற்றச்சாட்டு

தொழிற்சாலை நிர்வாகிகள் விசாரணைக்காக நீதிமன்றம் கொண்டு வரப்படுகின்றனர்

கோலாலம்பூர், செப் 15- ரவாங், சுங்கை கோங் ஆற்றில் அபாயகரமான பொருள்கள் கொட்டப்பட்ட சம்பவம் தொடர்பில் கனரக இயந்திர பழுது பார்ப்பு தொழிற்சாலை இயக்குநர்கள் நால்வர் உள்பட ஐவர் மீது செலாயாங் செஷன்ஸ் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது.

யிப் கோக் வாய் (வயது 53), யிப் கோக் முன் ( வயது 58), யிப் கோக் குய்ன் (வயது 70), யிப் கோக் வோங் (வயது 60) ஆகிய நான்கு சகோதரர்களும் தொழிற்சாலை நிர்வாகியான வூ வூன் லியோங் (வயது 59) தங்களுக்கு எதிரான இரு குற்றச்சாட்டுகளை மறுத்து விசாரணை கோரினர்.

யிப் சீன செங் அண்ட் சன்ஸ் நிறுவனத்தின் பட்டறையில் இருந்த அபாயகரமான கழிவு பொருள்களை சுங்கை கோங் ஆற்றை நோக்கி செல்லும் கால் வாயில் கொட்டியதன் மூலம் கீழறுப்பு செயலைப் புரிந்ததாக அவர்களுக்கு எதிரான முதல் குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ளது.

இம்மாதம் 2 மற்றும் 3 ஆம் தேதிகளில் ரவாங், கம்போங் சுங்கை டுவாவில் உள்ள தங்கள் தொழிற்சாலையில் இக்குற்றத்தை புரிந்ததாக அவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் 5 முதல் 30 ஆண்டுகள் வரையிலான சிறை, அபராதம் அல்லது இரண்டுமே விதிக்க வகை செய்யும் குற்றவியல் சட்டத்தின் 430 வது பிரிவின் கீழ் அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

அதே இடத்தில் அதே நேரத்தில் முறையான அனுமதியின்றி அபாயகரமான பொருள்களை அக்கால்வாயில் கலக்க விட்டதாக அந்த ஐவருக்கும் எதிரான இரண்டாவது குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ளது.

குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் ஒரு லட்சம் வெள்ளி அபராதம், ஐந்தாண்டு வரையிலான சிறை தண்டனை அல்லது இரண்டுமே விதிக்க வகை செய்யும் 1974 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் சட்டத்தின் 25(1) பிரிவின் கீழ் அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

அரசு தரப்பு மற்றும் எதிர் தரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களை செவிமடுத்த நீதிபதி ஷியாபிரா முகமது சைட், அந்த ஐவருக்கும் ஜாமீன் வழங்க மறுத்ததோடு வழக்கை அக்டோபர் மாதம் 27 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## சுங்கை கோங் பகுதியில் 4 தொழிற் சாலைகளின் லைசென்ஸ் ரத்து

ஷா ஆலம், செப் 7- அனுமதியை மீறி நடவடிக்கைகளை மேற்கொண்ட குற்றத்திற்காக ரவாங், சுங்கை கோங் பகுதியிலுள்ள நான்கு தொழிற்சாலைகளின் அனுமதியை செலாயாங் நகராண்மைக் கழகம் ரத்து செய்துள்ளது.

செலாயாங் நகராண்மைக்கழகம் மற்றும் இதர துறையினர் நிர்ணயித்துள்ள விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதை உறுதி செய்வதற்காக அப்பகுதியிலுள்ள 15 தொழிற்சாலைகள் மீது சோதனை மேற்கொள்ளப்
பட்டதாக செலாயாங் நகராண்மைக்கழகத்தின் வர்த்தக பிரிவு இயக்குநர் முகமது ஜின் மசூட் கூறினார்.

செலாயாங் நகராண்மைக்கழகம் மற்றும் இதர துறையினர் நிர்ணயித்துள்ள விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதை உறுதி செய்வதற்காக அப்பகுதியிலுள்ள 15 தொழிற்சாலைகள் மீது சோதனை மேற்கொள்ளப்பட்டதாக செலாயாங் நகராண்மைக்கழகத்தின் வர்த்தக பிரிவு இயக்குநர் முகமது ஜின் மசூட் கூறினார்.

அனுமதியின்றி கட்டிடம் கட்டியதற்காக 1974ஆம் ஆண்டு வடிகால் மற்றும் கட்டிட சட்டத்தின் 70(1) ஆம் பிரிவின் கீழ் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைக்கு நோட்டிஸ் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்

## சட்டவிரோத தொழிற்சாலைகளை விரைந்து உடைக்கப் புதிய சட்டம்

ஷா ஆலம், செப் 14- சட்டவிரோத தொழிற்சாலைகளை விரைந்து உடைக்க வகை செய்யும் சட்டத்தை இயற்றுவது குறித்து சிலாங்கூர் மாநில அரசு பரிசீலித்து வருகிறது.

தனியார் நிலத்தில் கட்டப்பட்டத் தொழிற்சாலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் சம்பந்தபட்ட உரிமையாளர்களே கட்டுமானங்களை அகற்ற நடப்பில் உள்ள சட்டம் வகை செய்வதாக மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

சட்டவிரோத தொழிற்சாலைகளுக்கு எதிராக நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனில் நிலத்திலுள்ள

கட்டுமானங்களை நில உரிமையாளர்களே அகற்றுவதற்கு ஏதுவாக 7ஏ அறிக்கையை சம்பந்தப்பட்ட நில உரிமையாளருக்கு அனுப்ப வேண்டும் என தேசிய நிலச் சட்டம் கூறுகிறது என அவர் தெரிவித்தார்.

தங்கள் நிலத்திலுள்ள கட்டிடங்களை தாங்களாகவே அகற்ற வேண்டும் என்பது இதன் பொருளாகவும் என்றார் அவர்.

தங்கள் பொருள்களை அகற்றுவதற்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டவில்லை எனக் கூறி நில உரிமையாளர்கள் சட்ட ரீதியாக வெற்றி பெற்ற சம்பவங்கள் நடந்துள்ளதாகவும அவர் குறிப்பிட்டார்.

# ஆட்சிக்குழு உறுப்பினர்களாக புர்ஹான், ஜவாவி பதவியேற்பு

கிள்ளான், செப் 17- தஞ்சோங் சிப்பாட் சட்டமன்ற உறுப்பினர் புர்ஹான் அமான் ஷா மற்றும் சுங்கை காண்டீஸ் சட்டமன்ற உறுப்பினர் முகமது ஜவாவி அகமது முக்னி ஆகிய இருவரும் சிலாங்கூர் ஆட்சிக்குழு உறுப்பினர்களாக நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

இங்குள்ள இஸ்தானா ஆலம் ஷா, பாலாய் ரோங் ஸ்ரீயில் இன்று நடைபெற்ற நிகழ்வில் சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல் ஹாஜ் முன்னிலையில் அவ்விருவரும் பதவி உறுதி மொழி மற்றும் இரகசிய காப்பு பிரமாணத்தை எடுத்துக் கொண்டனர்.

கூட்டரசு நிலையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை தொடர்ந்து பெர்சத்து கட்சியின் பிரதிநிதிகள் கடந்த மே மாதம் 5 ஆம் தேதி பதவியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து செலாட் கிள்ளான் சட்டமன்ற உறுப்பினர் டத்தோ அப்துல் ரஷீத் அசாரி வகித்து வந்த கலாச்சாரம், சுற்றுலா, மலாய் பண்பாடு மற்றும் பாரம்பரிய துறைக்கான ஆட்சிக் குழு பதவி காலியானது.

வீடமைப்பு மற்றும் நகர்புற நல்வாழ்வு துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் ஹனிசா முகமது தல்ஹாவின் அடிப்படை உறுப்பினர் அந்தஸ்தை கெஅடிலான் கட்சியின் கட்டொழுங்கு வாரியம் நீக்கியதால் அவரது பதவியும் காலியானது.

புதிதாக பதவியேற்றுள்ள இரு ஆட்சிக்குழு உறுப்பினர்களும் கெஅடிலான் கட்சியை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வீட்டின் முன் இனி வியாபாரம் செய்யலாம் சிலாங்கூர் அரசு அனுமதி

ஷா ஆலம், செப் 17- வீட்டின் முன் வியாபாரம் செய்ய விரும்புவோருக்கு லைசன்ஸ் வழங்க சிலாங்கூர் அரசு அனுமதி அளித்துள்ளது.

இதற்கான ஒப்புதலை மாநில ஆட்சிக்குழு இரு வாரங்களுக்கு முன்னர் வழங்கியதாக தொழில் முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் தெரிவித்தார்.

பொதுமக்கள் போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளின் ஓரங்களில் வியாபாரம் செய்வதை தவிர்ப்பதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் சொன்னார்.

ஆர்வம் உள்ளவர்கள் இந்த வியாபார அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம் எனக் கூறிய அவர், டைபாய்டு தடுப்பூசி போடுவது, சுத்தத்தைப் பேணுவது போன்ற விதி முறைகளை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

ஓராண்டுக்கு இந்த வியாபார அனுமதி வழங்கப்பட்டாலும் தொடர்ந்து வியாபாரம் செய்வதை உறுதி செய்வதற்காக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை லைசன்ஸை புதுப்பிக்க வேண்டும் என்றார் அவர்.

சித்தம் எனப்படும் சிலாங்கூர் இந்தியர் தொழில் ஆர்வலர் மையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடல் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினர்.

இந்த வாய்ப்பை பயன்படுத்தி தொடர்ந்து வியாபாரம் செய்து வருவோருக்கு முக்கிய இடங்களில் வியாபாரம் செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று ரோட்சியா மேலும் தெரிவித்தார்.

# திறன்மிக்கத் தொழிலாளர்களே தொழில் துறைக்கு தேவை

ஷா ஆலம், செப் 8- தொழில் துறையின் நடப்பு தேவையை பூர்த்தி செய்வதில் தொழில் திறனும் அறிவாற்றல்மிக்க மனித வளத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார்.

மாநிலத்தை வளப்படுத்தும் திட்டத்திற்கேற்ப திறன்மிக்க தொழிலாளர்களை உருவாக்கும் திட்டம் நிபுணர்கள் மற்றும் தொழில் துறையினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இது ஒரு கடுமையான பணி எனக் கூறிய அவர், உதாரணத்திற்கு உயர்கல்விக்கூடத்தில் படித்த பொறியாளர் தொழில் துறையின் தேவைக்கு பொருத்தமானவராக இல்லை என்றார். தனியார் உயர் கல்விக்கூடங்களில் இணைய பாதுகாப்பு மற்றும் தரவை மையமாக கொண்ட இளங்கலை பட்டப்படிப்பு வழங்கப்படுகிறது.

இருந்த போதிலும் அவர்கள் வேலை சந்தையில் நுழைவதற்குரிய ஆற்றலை கொண்டிருக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். இங்குள்ள செத்தியா சிட்டி மாநாட்டுக்கு மையத்தில் நடைபெற்ற 2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் மீதான கலந்துரையாடலில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பட்டதாரிகள் வேலை சந்தையின் தேவைக்கு ஏற்ற ஆற்றலை கொண்டிருப்பதை உறுதி செய்யும் வகையில் சிறப்பு பயிற்சிகளை அறிமுகம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

# செல்டெக் விநியோகத் திட்டத்தில் 500 தொழில் முனைவோர் பங்கேற்பு

பினாங்கு, செப் 11- செல்டெக் எனப்படும் சிலாங்கூர் இலக்கவியல் மின் விநியோகத் திட்டத்தில் 500 தொழில் முனைவோர் இணைந்துள்ளதாக தொழில் முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் தெரி-வித்தார்.

கடந்த ஜூன் மாதம் இத்திட்டம் தொடங்கப்பட்டதாகக் கூறிய அவர், மூன்றே மாதங்களில் இந்த இலக்கு எட்டப்பட்டது என்றார்.

மின்னியல் முறையில் வர்த்தகம் புரிவோருக்கான தளமாக இந்த செல்டேக் விளங்குவதாக அவர் தெரிவித்தார்.

முதல் மூன்று மாதங்களில் இத்திட்டத்தில் 300 பேரை ஈர்க்க திட்டமிட்டிருந்தோம். எனினும் அந்த இலக்கை கடந்து விட்டோம் என்றார் அவர்.

தங்களின் உற்பத்தி அல்லது தயாரிப்பு பொருள்களை சந்தைப் படுத்துவதற்கான வழி முறை தெரியாத தொழில் முனைவோருக்கு உதவும் வகையில் இந்த செல்டேக் திட்டம் உருவாக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழில் முனைவோர் தங்கள் வர்த்தகத்தை விரிவுபடுத்தி கொள்வதற்கு இத்திட்டம் பேருதவியாக இருக்கும். தங்கள் வர்த்தகத்தை விரிவுபடுத்தி கொள்வதற்கு தயக்கம் காட்டும் வர்த்தகர்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும் என ரோட்சியா மேலும் சொன்னார்.

பினாங்கில் நடைபெற்ற ஹோல் பினாங் 2020 அனைத்துலக மாநாடு மற்றும் கண்காட்சியில் கலந்து கொண்ட போது செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினர்.

ரோட்சியா கண்காட்சியை பார்வையிடுகிறார்

# தாமான் செந்தோசா பகுதியில் சாலையோரம் குப்பைகள் எரிப்பு

## சட்டமன்ற உறுப்பினர் குணராஜ் கண்டனம்

கிள்ளான், செப் 4- இங்குள்ள வீடமைப்பு பகுதிக்கு அருகே சுமார் ஒரு டன் குப்பைகளை பொறுப்பற்ற நபர்கள் சாலையோரம் கொட்டி எரியூட்டியுள்ளனர். இச்சம்பவத்திற்கு காரணமானவர்களை கண்டு பிடிக்கும் முயற்சியில் தாங்கள் ஈடுபட்டு வருவதாக செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் கூறினார்.

சுமார் ஒரு டன் அளவுக்கு மணிகள் மற்றும் சரங்களை உள்ளடக்கிய அலங்காரப் பொருள்களை அடையாளம் தெரியாத நபர்கள் எரித்துள்ளது தங்களின் தொடக்கக் ஆய்வில் தெரிய வந்ததாக அவர் சொன்னார்.

அந்த நபர்கள் குப்பைகளை சாலையோரம் கொட்டியதோடல்லாமல் அவற்றுக்கு தீ மூட்டியும் உள்ளனர். பொறுப்பற்ற இச்செயல் சுற்றுவட்டார மக்களிடையே சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார் அவர்.

சட்டவிரோதமாக குப்பைகள் கொட்டப்படும் சம்பவங்களைக் கண்டறிவதற்காக சிறப்பு குழு ஒன்றை அமைக்கும்படி தாம் இவ்வட்டார குடியிருப்பாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த குப்பைகளை அகற்றும் பணிக்காக கிள்ளான் நகராண்மைக் கழகம் மற்றும் கும்புலான் டாருள் ஏசான் பெர்ஹாட்டின் குப்பை அகற்றும் நிறுவனம் ஆகியவற்றின் உதவியை தாம் நாடியதாகவும் அவர் சொன்னார்.

# சிலாங்கூர் மக்களுக்கு மீண்டும் ”கிஸ் ”எனப்படும் பரிவுமிக்க அன்னையர் உதவித் திட்டம்

**ஷா ஆலம்,செப் 10** ரூ சிலாங்கூர் ”கிஸ் ”எனப்படும் பரிவுமிக்க அன்னையர் உதவித் திட்டத்திற்குக் கடந்த நவம்பர் மாதம் 1ந்தேதி டத்தோ மந்திரி புசார் அதிக ஒதுக்கீடுகளை அறிவித்தார். அதன்படி ரிங்கிட் 1.2 கோடியிலிருந்து 6.2 கோடியாக உயர்வளித்துள்ளார். இதன்வழி மேலும் 25000 குடும்பங்கள் பயனடைய வேண்டும் என்பதே அதன் நோக்கம். இத்திட்டம், 2017ல் ஆரம்பிக்கப்பட்ட பொழுது அதில் 50 ஆயிரம் குடும்பங்கள் பயனடைந்தன.

அதிக மானிய ஒதுக்கீடும் பெயர் பட்டியல் சீரமைப்பும் உதவி தேவைப்படும் மேலும் பல குடும்பங்களுக்குப் பயனளிக்கும் என்றார் மகளிர் மேம்பாட்டுக்குப் பொறுப்பான சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட்.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெற்றவர்களின் பட்டியல் மறு பரிசீலனை செய்வது உண்மையாக உதவிகள் தேவைப் படும் பிரிவினர் பயனடைவதை உறுதி படுத்துவதற்காகும் என்றார் அவர்.

பட்டியல் மறுபரிசீலனை என்பது உதவி பெறுவோரின் எண்ணிக்கையைக் குறைப்பது நோக்கமாகக் கொண்டதல்ல, மாநிலத்தின் பல உதவி திட்டங்களில் உதவிகளைப் பெறுவோர் தொடர்ந்து இதிலும் பயனடைந்து வரும் வேளையில், எந்த உதவியும் கிடைக்காமல் அவதிபடுவோரை அடையாளங்கண்டு அவர்களுக்கும் உதவும் நோக்கம் கொண்டது.

அதே வேளையில் இத்திட்டத்தின் வழி முன்பு உதவிபெற்ற சிலரின் வாழ்க்கை நிலை மேம்பட்டிருக்கலாம், ஆக வாழ்வில் உயர்ந்து, வறுமைக் கோட்டிலிருந்து விடு பட்டவர்கள் மற்றவர்களுக்கு வாய்ப்பு வழங்க இது போன்ற ஆய்வுகளும் ,மறுசீரமைப்புகளும் அவசியமாகிறது என்றார் சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட்.

# குழந்தைகளின் ஊட்டச்சத்து

## குறைவு பிரச்னை மீது தீவிர கவனம் தேவை

## டாக்டர் வேணுகோபாலன் வலியுறுத்து

ஷா ஆலம், மக்கள் வீடமைப்பு திட்ட குடியிருப்புகளில் (பி.பி.ஆர்.) உள்ள குழந்தைகள் மத்தியில் காணப்படும் ஊட்டச்சத்தின்மை பிரச்சினை மீது அனைத்து தரப்பினரும் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று சிலாங்கூர் மாநில துணை சுகாதார இயக்குநர் டாக்டர் பி.வேணுகோபாலன் கூறினார்.

ஆற்றமிக்க நகரையும் வெற்றி கண்ட குடியிருப்பாளர்களையும் உருவாக்க வேண்டுமானால் குழந்தைகள் மத்தியில் காணப்படும் ஊட்டச்சத்தின்மைப் பிரச்னைக்கு தீர்வு காணப்படுவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பி.பி.ஆர். குடியிருப்புகளில் உள்ள குழந்தைகள் உண்ணும் உணவில் சமசத்தும் ஊட்டச்சத்தும் குறைவாக உள்ளதாக ஈராண்டுகளுக்கு முன்னர் ஐ.நா.வின் சிறார் நிதியகம் வெளியிட்ட அறிக்கை கூறியதை டாக்டர் வேணுகோபாலன் சுட்டிக்காட்டினார்.

அந்த அறிக்கையைத் தொடர்ந்து கோத்தா டாமன்சாரா பி.பி.ஆர். குடியிருப்புகளில் சுகாதாரத் துறை ஆய்வு மேற்கொண்ட போது அதில் குறிப்பிடப்பட்ட விஷயங்கள் உண்மையானவை எனத் தெரிய வந்தது என்றார் அவர்.

இங்குள்ள செய்தியா சிட்டி மாநாட்டு மையத்தில் நடைபெற்ற 2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் மீதான கலந்துரையாடல் நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தங்கள் குழந்தைகளுக்கு போதுமான சத்துணவு கிடைப்பதை உறுதி செய்யும் அளவுக்கு பெற்றோர்களின் நிதி நிலைமை வலுவாக இல்லை என்பதை தாங்கள் கண்டறிந்தாகவும் அவர் குறிப்பிட்டார்.

குழந்தைகளின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு சத்துணவுகள் மிக முக்கிய பங்கினை ஆற்றுகின்றன. குழந்தைகள் பிற்காலத்தில் சிறந்து விளங்குவதற்கு ஆரம்ப கால உணவு அவர்களுக்கு இன்றியமையாததாக விளங்குகிறது என்றார் அவர்.

# மாநில அரசின் வருமானத்தை

## பெருக்க சுற்றுலா துறைக்கு ஊக்குவிப்பு

ஷா ஆலம், செப் 14- வருமானத்தை பெருக்குவதற்காக டூரிசம் சிலாங்கூர் எனப்படும் சுற்றுலா மேம்பாட்டுத் துறை சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சுற்றுலா துறை தற்போது மீட்சி நிலையை நோக்கி செல்வதால் அத்துறையின் வாயிலாக வருமானத்தை ஈட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அதன் பொது நிர்வாகி அஸ்ருள் ஷா முகமது சொன்னார்.

சுற்றுலாத்துறை மூலம் கடந்தாண்டு 2 கோடியே 18 லட்சம் வெள்ளி வருமானம் கிடைத்ததாகக் கூறிய அவர், கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக இவ்வாண்டில் அந்த வருமானம் சற்று குறையலாம் என்றும் அவர் கூறினார்.

மாநில மற்றும் அனைத்துலக நிலையிலான விளையாட்டுகளை நடத்தும் ஏற்பாட்டாளர்களின் தேர்வுக்குரிய இடமாக சிலாங்கூர் விளங்குவதால் மாநிலத்தை விளையாட்டுச் சுற்றுலா மையமாக பிரபலபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார் அவர்.

சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஐம்பது விழுக்காடு மாநில அரசுக்கு கிடைக்கும் வேளையில் எஞ்சிய தொகை மத்திய அரசிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 42 லட்சம் மலேசியர்கள் இன்னும் வாக்காளர்களாகப் பதிந்து கொள்ளவில்லை

கோலாலம்பூர், செப் 10- நாட்டில் வாக்களிக்கும் தகுதி கொண்ட 21 வயதைக் கடந்த 42 லட்சம் பேர் இன்னும் தங்களை வாக்காளர்களாகப் பதிந்து கொள்ளவில்லை என்று பிரதமர் துறை (நாடாளுமன்றம் மற்றும் சட்டங்கள்) துணையமைச்சர் டத்தோ ஷாபுடின் யாஹ்யா கூறினார்.

நாட்டில் வாக்களிக்கும் தகுதி கொண்ட மொத்த மக்கள் தொகையில் இது 22 விழுக்காடாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் 21 வயதுக்கும் மேற்பட்ட சுமார் 42 லட்சம் பேர் இன்னும் வாக்காளர்களாகப் பதிந்து கொள்ள வில்லை. அனைத்துத் தரப்பினரும் உரியப் பங்கினை ஆற்ற வேண்டிய முக்கியப் பிரச்னை இதுவாகும் என அவர் மேலும் சொன்னார்.

தற்போது நம்மிடம் 21 வயதுக்கும் மேற்பட்ட சுமார் ஒரு கோடியே பதினைந்து லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். 18 வயதில் வாக்களிக்கும் முறையை நாம் அமல்படுத்தினால் வாக்காளர்களின் எண்ணிக்கை மேலும் அறுபது முதல் எழுபது லட்சமாக உயரும் என்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது அவர் தெரிவித்தார்.

வாக்களிக்கும் வயதை 18ஆக நிர்ணயிக்கும் திட்டத்திற்குத் தயார்படுத்திக் கொள்ளும் வகையில் புதிய வாக்காளர்களை ஈர்க்க எத்தகைய திட்டங்களை அரசாங்கம் கொண்டிருக்கிறது என்ற செனட்டர் இஸ்மாயில் யாக்கோப் கேள்வி எழுப்பியிருந்தார்.

வாக்காளர்களாக இன்னும் பதிந்து கொள்ளாதவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொறுப்பை நாம் தேர்தல் ஆணையத்திடம் மட்டும் விட்டு விடக்கூடாது. இந்தப் பணியை அரசு சாரா அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்று துணையமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்,

# கோம்பாக்கில் 120,000 முகக் கவசங்கள் விநியோகம்

கோம்பாக், செப் 11- கோம்பாக் வட்டாரத்திலும் 104 ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளிகளுக்கு மீண்டும் பயன்படுத்தக் கூடிய 120,000 முகக் கவசங்களை சிலாங்கூர் மாநில அரசு விநியோகம் செய்தது.

தங்கள் பிள்ளைகளுக்கு அன்றாடம் முகக் கவசங்களை ஏற்பாடு செய்ய வேண்டிய நிலையில் இருக்கும் பெற்றோர்களுக்கு உதவும் வகையில் இந்த முகக் கவசங்கள் வழங்கப்படுவதாக மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

முகக் கவசம் அணிவது கட்டாயமாகப்பட்ட போது அதிக பிள்ளைகளைக் கொண்ட பெற்றோர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என யோசித்தோம். அவர்களுக்கு உண்டாகும் செலவுகளை குறைப்பதற்கான வழிகளையும் ஆராய்ந்தோம் என்றார் அவர்.

பிள்ளைகளின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் அரசாங்கத்தின் கடப்பாட்டின் ஒரு பகுதியாகவும் எஸ்.ஓ.பி. எனப்படும் நிர்ணயிக்கப்பட்ட சீரான நடைமுறையை மாணவர்கள் பின்பற்றுவதை உறுதி செய்யும் நோக்கிலும் இந்த முகக் கவசங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன என்றார் அவர்.

கோம்பாக், ஸ்ரீ சியான்தான் மண்டபத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கு இலவச முகக் கவசங்கள் வழங்கும் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினர்.

ஷா ஆலம், ஜூப்ளி பேராக் மண்டபத்தில் வரும் 25 ஆம் தேதி நடைபெறும் நிகழ்வில் மாநிலத்திலுள்ள அனைத்து பள்ளிகளுக்கும் இலவச முகக் கவசங்கள் விநியோகம் செய்யப்படும் என்றும் அவர் சொன்னார்.

கோவிட்-19 நோய்த் தொற்றை தடுப்பதற்கு ஏதுவாக பள்ளிகளில் சுகாதார கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# பத்து ஆராங் புதிய சுற்றுலா மையமாக உருவாகும்

ஷா ஆலம், செப் 10- ரவாங் அருகே உள்ள பத்து ஆராங்கை புதிய சுற்றுலா மையமாக உருவாக்குவதற்குரிய வாய்ப்பு உள்ளதாக ரவாங் சட்டமன்ற உறுப்பினர் சுவா வேய் கியாட் கூறியுள்ளார்.

சுற்றுப்பயணிகளுக்கு, குறிப்பாக கரடுமுரடான பாதைகளில் சைக்கிளோட்டத்தை மேற்கொள்வதில் ஆர்வம் உள்ளவர்களுக்கு, இது உகந்த இடமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நீண்ட பாரம்பரியம் கொண்ட இந்த நகர் வார இறுதி நாட்களில் சைக்கிளோட்டிகளால் நிரம்பி வழியும் நகரமாக காணப்படுவதாக அவர் கூறினார்.

பத்து ஆராங் நகர் சிலாங்கூர் மாநிலத்தின் சுற்றுலா வரைபடத்தில் இடம் பெற்றுவிட்டது. இந்த பகுதியை பிரபலப்படுத்தும் முயற்சியில் தற்போது ஈடுபட்டு வருகிறோம். இதுதவிர, அதிகமான சுற்றுப்பயணிகளை ஈர்ப்பதற்கும் இந்த வரலாற்றுப் பின்னணியை அவர்கள் அறிந்து கொள்வதற்கும் ஏதுவாக இணையத் தளம் ஒன்றை உருவாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம் என்றார் அவர்.

பிரிட்டிஷ் ஆட்சியின் போது இந்நகர் நிலக்கரி சுரங்க நடவடிக்கைகளுக்கு பிரசித்தி பெற்று விளங்கியது. நிலக்கரி-யின் விலை வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து பல சுரங்கங்கள் மூடப்பட்டன. அதன் பின்னர் இந்நகரை பிரபலப்படுத்துதற்கான முயற்சிகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்படவில்லை என்றார் அவர்.

தங்கும் வசதியை மேம்படுத்தும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருவதை சுட்டிக்காட்டிய அவர், உள்நாட்டுச் சுற்றுப்பயணிகள் அதிகளவில் இங்கு வருவார்கள் எனத் தாம் எதிர்பார்ப்பதாக கூறினார்.

# மருத்துவ சுற்றுலாத்துறைக்கு புதிய உத்வேகம் தேவை

கோலாலம்பூர், செப் 9- மலேசியா உலகத் தரம் வாய்ந்த சுகாதாரச் சேவைகளை வழங்கி வருகிறது. சுகாதார பராமரிப்பு தொடர்பில் நாம் பெற்றுள்ள உலகலாவிய நிலையிலான அங்கீகாரங்கள் இதற்கு ஒரு சான்றாகும்

நமக்கு கிடைத்த இண்டர்நேஷனல் மெடிக்கல் டிராவல் ஜெர்னல் முதன்மை விருது, 2019ம் ஆண்டிற்கான சுகாதாரம் மற்றும் மருத்துவச் சுற்றுலாவுக்கான விருது போன்றவற்றை உதாரணமாக குறிப்பிடலாம்.

சுகாதாரம் மற்றும் மருத்துவச் சுற்றுலாவுக்கான விருதை மலேசியா 2017, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் தொடர்ச்சியாக மூன்று முறை வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர, கடந்த 2019ஆம் ஆண்டில் சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறைக்கான மிகவும் பிரசித்தி பெற்ற 'டெஸ்டினேஷன் அப்தி இயர்' விருதையும் மலேசியா பெற்றது.

அமெரிக்க சஞ்சிகையான 'இண்டர்நேஷனல் லிவிங்', சுகாதார பாதுகாப்பு பிரிவில் மலேசியாவை கடந்த 2015 முதல் 2019 வரை ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து முதலிடத்தில் வைத்துள்ளதாக மலேசிய மருத்துவச் சுற்றுலா மன்றத்தின் தலைமை செயல் முறை அதிகாரி ஷெரின் அஸ்லி பெர்னாமா செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் கூறினார்.

இந்த சுகாதார சுற்றுலாத் துறை நேர்மறையான வளர்ச்சியைக் கண்டு வருவாக கூறிய அவர், கடந்த ஐந்தாண்டு காலத்தில் வருடாந்திர வளர்ச்சியாக 17 விழுக்காட்டைப் பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார்

இந்த சிறப்பான அடைவு நிலையின் காரணமாக உலகின் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் எலும்பியல்,இருதயம், நரம்பியல், புற்றுநோய் உள்ளிட்ட பல நோய்களுக்காக சிகிச்சை

பெற மலேசியா வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

யாரும் எதிர்பாராத வகையில் ஏற்பட்ட கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக மற்றத் துறைகளைப் போலவே மருத்துவச் சுற்றுலாத் துறையும் பாதிக்கப்பட்டதாகவும் ஷெரின் சொன்னார்.

மருத்துவச் சுற்றுலா மூலம் இவ்வாண்டில் 200 கோடி வெள்ளியை வருமானமாகவும் 1,000 கோடி வெள்ளியை இதர வகை பொருளாதார விளைவுகள் மூலமாகவும் ஈட்ட திட்டமிட்டிருந்தோம். எனினும் கோவிட் நோய்த் தொற்று காரணமாக தற்போது அந்த வருமான இலக்கை 50 கோடி வெள்ளியாகவும் பொருளாதார விளைவுகளின் மதிப்பை 300 கோடி வெள்ளியாகவும் மறு மதிப்பீடு செய்துள்ளோம் என்றார் அவர்.

# நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை மீறினால் நீதிமன்ற நடவடிக்கை! இரவு விடுதி உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை

பெட்டாலிங் ஜெயா, செப் 1- மீட்சிக்கான நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணைக் காலத்தில் அனுமதியின்றி வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ளும் இரவு மையங்கள் மற்றும் மதுபான விடுதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட விடுதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது மற்றும் அனுமதியை ரத்து செய்வது போன்ற கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்புக்கான மூத்த அமைச்சர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் கூறினார்.

மீட்சிக்கான நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணைக் காலத்தில் அத்துறைகள் செயல் பட அனுமதிக்கப்படவில்லை எனக் கூறிய அவர், உத்தரவை மீறும் மையங்கள் மீது 1988ஆம் ஆண்டு தொற்றுநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும் என்றார்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை மீறி மதுபான மற்றும் இரவு விடுதிகளில் இருந்த காரணத்தால் கைது செய்யப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அவர் சொன்னார்.

இரவு விடுதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அனைத்துச் சோதனை நடவடிக்கைகளிலும் ஊராட்சி மன்ற அமலாக்க அதிகாரிகளும் இணைத்துக் கொள்ளப்படுவர் என்று இங்கு நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

ஊராட்சி மன்ற அமலாக்கத் துறையினரின் பங்கேற்பின்றிச் சோதனைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் வர்த்தக உரிமம் ரத்து செய்யப்படுவதற்கு ஏதுவாகச் சம்பந்தப்பட்ட விடுதிகளின் பட்டியல் ஊராட்சி மன்றங்களிடம் வழங்கப்படும் என்றார் அவர்.

இரவு விடுதிகள் செயல்படத் தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் அதன் உரிமையாளர்களில் சிலர் தன்மூப்பாக செயல்பட்டு வருகின்றனர். ஆதலால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது என்றார் அவர்.

மீட்சிக்கான நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை மீறிய காரணத்திற்காக கைது செய்யப்பட்ட 778 பேரில் 600 பேர் இரவு விடுதிகளில் நடைபெற்ற நிகழ்வுகளில் பங்கேற்றவர்கள் என அவர் தெரிவித்தார்.

# எழுச்சி கொள்ள இந்திய சமூகம் முனைப்பு காட்ட வேண்டும் -ரோட்சியா இஸ்மாயில் வேண்டுகோள்

ஷா ஆலம், செப் 16- சிலாங்கூர் மாநில மக்கள் தொகையில் 11.2 விழுக்காடாக இருக்கும் இந்திய சமூகம் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள முனைப்பு காட்ட வேண்டும் என்று தொழில்முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கேட்டுக் கொண்டார்.

இந்திய சமூகம் எழுச்சி காண்பதற்கு பல்வேறு வாய்ப்புகள் உள்ளதாக கூறிய அவர், நமக்காக மட்டுமின்றி அடுத்து வரும் சந்ததியினரின் நலனுக்காகவும் அத்தகைய வாய்ப்புகளை முறையாகப் பயன்படுத்தி முன்னேற்றம் காண வேண்டும் என்றார்.

சித்தம் எனப்படும் சிலாங்கூர் இந்தியர் தொழில் ஆர்வலர் மையத்தின் ஏற்பாட்டில் இங்குள்ள ஜூப்ளி பேராக் மண்டபத்தில் நடத்தப்பட்ட தொழில்திறன் பயிற்சியில் பங்கு கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வுக்கு தலைமையேற்று உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சித்தம் திட்டத்தின் வாயிலாக இந்திய சமூகத்தில் தொழில்முனைவோரை உருவாக்கும் முயற்சியில் மாநில அரசு ஈடுபட்டு வருவாகவும் அவர் குறிப்பிட்டார்.

சித்தம் திட்டத்தின் வாயிலாக திறன் பெற்ற தொழில்முனைவோரை உருவாக்கும் முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகிறோம். இத்திட்டம் நிதி வழங்குவதை நோக்கமாக கொண்டது அல்ல. இந்திய சமூகத்தை தொழில் திறன் பெற்ற சமூகமாக உருவாக்கும் நோக்கிலானது என்றார் அவர்.

சித்தம் திட்டம் தொழில்முனைவோர் மேம்பாடு, திறன் மற்றும் தயாரிப்பு பயிற்சி, வர்த்தகம் மற்றும் தொழில் புரிவதற்கு தேவையான கருவிகளுக்கான நிதி உதவித் திட்டம் மற்றும் குரோ எனப்படும் சுய வழியில் வளம் காணும் திட்டம் ஆகிய நான்கு அடிப்படை அம்சங்களைக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சித்தம் உள்பட இந்திய சமூகத்திற்காக சிலாங்கூர் அரசு மேற்கொண்டு வரும் திட்டங்கள் தொடர்பில் பல்வேறு தரப்பினரிடமிருந்து குறைகூறல்கள் வந்த தையும் ரோட்சியா தமதுரையில் சுட்டிக்காட்டினார்.

# தொழில்திறன் பயிற்சி வழி கோவிட்-19 சவாலை சமாளிப்போம்! சமூகத்திற்கு குணராஜ் அறைகூவல்

ஷா ஆலம், செப் 16- கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க தொழில் திறன் பயிற்சிகளில் இந்திய சமூகம் கவனம் செலுத்த வேண்டும் என்று செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் கூறினார்.

அந்த நோய்த் தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள வருமான பாதிப்பை சமாளிக்க பகுதி நேரமாக இரண்டு அல்லது மூன்று வேலைகளைச் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று அவர் சொன்னார்.

இதுபோன்ற சூழ்நிலைகளில் திறன் பயிற்சித் திட்டங்கள் மூலம் ஏதாவது ஒரு கைத்தொழிலை நாம் கற்றுக் கொள்ளும் பட்சத்தில் கூடுதல் வருமானத்தை ஈட்டுவதற்குரிய வாய்ப்பினைப் பெற முடியும் என்றார் அவர்.

தற்போது உள்ளதைவிட அதிக வருமானத்தைப் பெறுவதற்கான வழிகளை நாம் தொடர்ந்து ஆராய வேண்டும் எனக் கூறிய அவர், சௌகரியமான சூழலில் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு சவால்மிக்க சூழலை எதிர்கொள்ள நாம் தயாராக வேண்டும் என்றும் குணராஜ் கேட்டுக் கொண்டார்.

சித்தம் எனப்படும் சிலாங்கூர் இந்தியர் தொழில் ஆர்வலர் மையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற தொழிலதிறன் பயற்சியில் பங்கு கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தியர்களுக்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட தொழில்திறன் மேம்பாட்டுத் திட்டமாக இந்த சித்தம் விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தின் வழி முதல் கட்டமாக 40 பேர் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்றுள்ள வேளையில் இரண்டாம் கட்ட பயிற்சிக்கு 30 பேர் தயாராகிவுள்ளது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுவதற்கு காரணமாக விளங்கி வரும் சித்தம் அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மற்றும் இந்திய சமூகத் தலைவர்களைத் நான் பெரிதும் பாராட்டுகிறேன் என்றார் அவர்.

# எப்படியெல்லாம் இந்தியர்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்பதற்கு இன்னொரு சான்று

வணக்கம், சிலாங்கூர் இன்று மாத இதழாகவும் இணையத்தின் வழியும் நாள் தோறும் மாநிலத்தின் முக்கிய நிகழ்வுகளை மக்களிடம் கொண்டு சேர்க்கவும், உண்மையை மக்கள் அறிந்துகொள்ளவும், மாநில அரசுடன் மக்களுக்குத் தொடர்புக்கு வழிவகுக்கும் ஊடகமாக இருந்து வருகிறது

ஊடகங்கள் தவிர்த்து, ஜனநாயகக் கட்டமைப்பில் மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்க நம் நாட்டில் அரசாங்கம் 4 அடுக்கு சேவை தளங்களை ஏற்படுத்தியுள்ளது. அதில் நாடாளுமன்றம், சட்டமன்றம், ஊராட்சிமன்றம், கிராம வளர்ச்சிக் குழுக்கள் வாயிலாக அரசாங்கச் சேவைகளைப் பெறலாம். ஆனால் இந்தியர்களில் பெரும்பாலும் தோட்டப் புறங்களில் வாழ்ந்து வந்ததால் நீண்டகாலமாக மலேசிய இந்தியர்களுக்கு 3 அடுக்கு சேவைகள் கூடச் சரியாகக் கிட்டாதது துரதிஷ்டமே!.

தோட்டம் மற்றும் கிராமப்புறங்களில் வாழ்ந்த நம் மக்கள் அவர்களின் உரிமைகளை மட்டுமின்றி அடிப்படை அரசாங்கச் சேவைகளைக்கூடப் பெறாமலும், அதுகுறித்து சரியாக அறிந்து கொள்ளாமலும் போனதற்கு இது ஒரு முக்கியக் காரணம்.

அதே வேளையில் நாடு சுதந்திரம் பெற்ற சில ஆண்டுகளிலேயே, மக்களுடன் மக்களாக இருந்து சேவையாற்றும் சீனப் புதுகிராமத் தலைவர்கள், மற்றும் மலாய் பூர்வீகக் கிராமத் தலைவர்களின் சேவைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று அந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் அவர்களை உயர்த்தி கொண்டனர். ஆனால், நமது நிலையோ, பரிதாபத்திற்கு உரியதானது! ஏன் இந்த நிலை?

அதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம், ஆனால் முன்னால் சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினரான மாண்புமிகு டத்தோ டாக்டர் சேவியர் ஜெயக்குமாரைக் கேட்டால் சரியான வழிகாட்டுதல் இல்லை என்கிறார்.

இருந்திருந்தால், சிலாங்கூர் மாநிலத்தில் குடிசை ஒழிப்பு என்ற போர்வையில் பட்டணங்களை ஒட்டி இந்தியர்கள் வாழ்ந்த பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள், அம்னோ இடைத்தரகர்கள் வழி அபகரிக்கப்பட்டு, பல நிறுவனங்களுக்குக் விடப்பட்டிருக்காது.

மேம்பாட்டு கைமாற்றி

குடிசைகள் ஒழிப்பினால் சிலாங்கூரில் இந்தியர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளும், இடையூறுகளுக்கும் அளவே இல்லை. தோட்டத் துண்டாடலின் போது நாட்டில் இந்தியர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களை விட மோசமானது மிகக் கொடுமையானது. ஆனால், அது குறித்து எவரும் அதிகமாகப் பேசுவது இல்லை.

அன்று தோட்டங்களிலிருந்து வெளியேறிய இந்தியர்கள் பட்டணங்களை ஒட்டிய அரசாங்கப் புறம்போக்கு நிலங்களில் குடியேறினர். வாழ்நாள் முழுவதும் தங்கள் உழைப்பிற்குக் கிடைத்த ஓய்வூதியத்தைக் கொண்டு தமது எனச் சொல்லிக் கொள்ளவாவது ஒரு குடிசையைக் கட்டிக்கொண்டு காலத்தைக் கழித்தனர். அங்குச் சிறு பயிர்களை நடவும், கால் நடைகளை வளர்க்கவும், இலவசக் குடிநீருக்குக் கூட வசதியிருந்தது.

குடிசைகள் ஒழிக்கப்பட்டுச் சுமார் 20 ஆண்டுகள் ஆகி விட்டது, இருந்த குடிசைகளையும் இழந்துவிட்டு, ஒரு வேளை உணவுக்கே சிரமப்படும் குடும்பங்கள், இன்று அரசாங்கப் பிபிஆர் அடுக்குமாடி வீடுகளுக்கு, வீட்டு வாடகை, நீர், மின்சார, வீட்டுத் தொகுதி பராமரிப்பு கட்டணம் செலுத்த வேண்டும் குடிசைகளையும் இழந்துவிட்டு, ஒரு வேளை உணவுக்கே சிரமப்படும் குடும்பங்கள், இன்று அரசாங்கப் பிபிஆர் அடுக்குமாடி வீடுகளுக்கு, வீட்டு வாடகை, நீர், மின்சார, வீட்டுத் தொகுதி பராமரிப்பு கட்டணம் செலுத்த வேண்டும் என்ற கட்டாயத்தில் இருக்கின்றனர். தவறினால் நடுத்தெருவில் தஞ்சம் புகவேண்டும் என்ற சிக்கலான நிலையில் பரம ஏழைகளாக நம் மக்கள் வாழ்கின்றனர்.

அது போன்ற பற்பல இடையூறுகளைப் பட்டண எல்லைகளுக்கு வெளியில் வாழும் அடுக்குமாடி வீடு மற்றும் கிராமப்புறத் தனியார் வீடமைப்புகளில் வாழும் நம் மக்கள் எதிர்நோக்கிய வண்ணமே இருக்கின்றனர் என்பதனை நாம் அனைவரும் அறிவோம்.

ஒருவரின் பிரச்சனை மற்றவர்கள் கண்களுக்குச் சிறியதாகக் கூடத் தென்பட்டிருக்கலாம், ஆனால் அதனால் பாதிக்கப்படும் நபரே அதன் கடுமையை உணர்வார். ஆகவே எல்லாப் பிரச்சனைகளையும் சமுதாயம் காலத்தோடு கவனிக்க வேண்டும்.

சிறியதோ பெரியதோ, அன்று தீர்க்கப்படாத விவகாரங்களே, இன்று பூதகரமாகச் சமுதாயத்தின் முன் நிற்கிறது.

அதைப்போன்றே, அவ்வப்போது எழும் பிரச்சனைகளை எப்படித் தீர்ப்பது என்பதற்கு மக்களிடையே வாழும் ஒருவரை அடையாளப்படுத்தவும் அவருக்கு அங்கீகாரம் வழங்குவதே ,இந்தியச் சமுகத் தலைவர்கள் பதவியைத் தோற்றுவிக்க முக்கியக் காரணம் என்றார் அவர்.

இப்பொழுது, எப்படி சம்பந்தப் பட்ட நில அலுவலகத்திற்கோ, சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கோ பிரச்சனைகளை இந்திய சமுகத் தலைவர்கள் நேரடியாக கொண்டு செல்கிறார்கள், பொது மக்களுக்குத் வழிகாட்டியாக இருந்து செயல்படவும், அவ்வப் போது சமுதாயத்திற்கு வேவை படும் சிறு உதவிகளை செய்யவும் இந்த இந்திய சமுகத் தலைவர்களின் பதவியை பயன் படுகின்றனர் என்பதை அறிவது மகிழ்ச்சியாக உள்ளது.

இது சிலாங்கூரில் ஆரம்பிக்கப் பட்டாலும், இந்தியச் சமுகத் தலைவர்கள் சிறப்பாகச் செயல் பட்டால், மற்ற மாநிலங்களும் அதனைப் பின்பற்றத் தொடங்கும் நம்பிக்கையில் அன்று இருந்த ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒருவராவது இந்த பதவியில் இருக்க வேண்டும் ஒன்று நாம் முன்வைத்த கோரிக்கைக்கு முதல் கட்டமாக 42 பேருக்கு மட்டுமே அன்று அனுமதியளிக்கப் பட்டது என்றார் அவர்

# ஆற்று தூய்மைக்கேட்டைக் கண்காணிக்க ட்ரோன் தொழில்நுட்பம்

ஷா ஆலம், செப் 10- ஆறுகளை கண்காணிக்க ட்ரோன் எனப்படும் சிறிய வகை வானூர்தி தொழில் நுட்பத்தை பயன்படுத்துவது குறித்து சிலாங்கூர் மாநில அரசு பரிசீலித்து வருகிறது.

சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ஆறுகள் வழியாக செல்லும் நீர் மாசுபடும் சம்பவங்கள் நிகழ்வதை தடுப்பதற்கு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இரு முக்கிய நதிகளான சுங்கை சிலாங்கூர் மற்றும் சுங்கை லங்காட்

ஆகியவற்றை ட்ரோன் சாதனம் மூலம் கண்காணிக்கும் சிறப்பு குழுவின் உருவாக்கம் தொடர்பில் விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்விகாரத்தில் நமக்கு கூடுதல் தொழில் நுட்பம் தேவைப்படுகிறது. ஆற்று நீரை சோதிக்கவும் மனிதர்களின் உதவியின்றி கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளவும் கூடிய திறன் கொண்ட தரப்பினருடன் பேச்சு நடத்தி வருகிறோம் என்றார் அவர்.

இந்நோக்கத்திற்காக தாங்கள் ட்ரோன் தொழில் நுட்பம் மற்றும் இயந்திரங்களை பயன்படுத்தவுள்ளதாவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் நம்மால் ஆற்று தூய்மைக்கேட்டை கண்டு பிடிக்க முடியும். எனினும், துர்நாற்றம் தொடர்பான தூய்மைக்கேடு நமக்கு பெரும் சவாலாக விளங்குகிறது. ஏனென்றால் வாடையை நுகரும் ஆற்றல் மனிதர்களுக்கு மட்டுமே உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு நடைபெற்ற தி அமின் ஷோ நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தூய்மைக்கேட்டை கண்டறியும் கருவிகளை ஆற்றில் பொருத்துவது குறித்து கருத்துரைத்த அவர், லுவாஸ் எனப்படும் நீர் நிர்வாக வாரியம் 5 முதல் 10 இடங்களில் அக்கருவிகளைப் பொருத்தியதாகவும் எனினும் வேகமான நீரோட்டம் காரணமாக அதன் செயல் பாடுகளில் இடையூறு ஏற்பட்டதோடு ஆற்றில் உள்ள உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டதாகச் சொன்னார்.

# நீர் மாசுபடுதலைத் தடுக்க மத்திய - மாநில அரசுகளின் ஒத்துழைப்பு அவசியம்

ஒரு மாநில அரசாக நதி நீர் மாசுபடுதலைத் தடுக்கச் சிலாங்கூர் அரசுக்கு உள்ள அதிகாரங்கள் சொற்பமே, அதனால் குற்றவாளிகள் எளிதில் தப்பித்துக்கொள்கின்றனர். 1999ம் ஆண்டு நீர் சேவை சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் சட்டத்திலும் மத்திய அரசுக்கு அதிக அதிகாரம் இருப்பதால், நீர் மாசுபடுதலைத் தடுக்கும் செயலை ஆக்ககரமாகச் செயல் படுத்த மத்திய அரசு முதல் அனைத்து ஏஜென்சிகளின் ஒத்துழைப்பும் மாநிலத்துக்கு மிக அவசியம் என்றார் சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி தெரிவித்தார்.

மாநிலத்தில் நதிகள் மாசுபடுவதைத் தடுக்க மாநிலச் சட்ட ஆலோசகர் டத்தோ சலீம் நிறுவனத்தின் இயக்குனர் எஞ்சினியர் அஹிம் ஒஸ்மான், சுற்றுச்சூழல் இலாக்காவின் இயக்குனர் நோர் அசியா ஜபார் ஆகியோருடன் மந்திரி புசார் சந்திப்பு நடத்தியபின் நதி நீர் மாசுபடுத்துதல் மீது அவசரமாகக் கடும் நடவடிக்கை தேவைப்படுவது குறித்துக் குறிப்பிட்ட அவர்.

மாநிலத்தில் நதி நீர் மாசு படுத்தல் தொடர்பாக எல் லாத் தகவல்களையும் உள்ளடக்கிய துல்லியமான அறிக்கையைச் சட்டத்துறை இலாக்காவுக்கு மாநில அரசு வழங்க இருப்பதாகக் குறிப்பிட்டார்.

நதிகள் மாசுபடுவதைத் தடுக்க, குற்றம் இழைப்பவர்களுக்குக் கடும் தண்டனைகள் வழங்கச் சட்டங்களைக் கடுமையாக்கப்பட வேண்டியது குறித்து மாநில மத்திய அரசுகள் விவாதிக்க வேண்டும் என்று நேற்று மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி விடுத்திருந்த கோரிக்கைக்குச் சட்டத்துறை தலைவர் அலுவலகம் அளித்துள்ள உடனடியான பதிலுக்குத் தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்.

# நீர் மாசுபடுவதைத் தடுக்க கடுமையான சட்டங்களை இயற்றுவீர் கோத்தா அங்கிரிக் சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை

ஷா ஆலம், செப் 4- பொதுமக்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தக் கூடிய நீர் தூய்மைக் கேட்டுச் சம்பவங்கள் இனியும் தொடராதிருப்பதை உறுதி செய்ய நீர் பாதுகாப்பு தொடர்பில் கடுமையான சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என மாநில அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நீரின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக 1999ஆம் ஆண்டு சிலாங்கூர் நீர் நிர்வாக வாரிய சட்டம் திருத்தப் பட வேண்டும் என்று கோத்தா அங்கிரிக் சட்டமன்ற உறுப்பினர் நஜ்வான் ஹலிமி வலியுறுத்தினார்.

தற்போதுள்ள சட்டங்கள் கடுமையானவையாக இல்லாத காரணத்தால் நீர் பாதுகாப்பு விஷயத்தில் பலர் சட்டத்தை மீறுவதைச் சுட்டிக்காட்டிய அவர், சிறைத்தண்டனை மற்றும் கூடுதல் அபராதம் விதிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட சட்டங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றார்.

இவ்விவகாரம் தொடர்பில் மாநில அரசு மத்திய அரசுடன் பேச்சு நடத்த வேண்டும். இத்தகைய குற்றங்களைப் புரிவோருக்கு கட்டாய சிறைத்தண்டனை விதிப்பதற்கு ஏதுவாக 2006ஆம் ஆண்டு நீர் சேவை தொழில்துறை சட்டத்தில் திருத்தம் செய்வது குறித்து மத்திய மற்றும் மாநில அரசுகள் பேச்சு நடத்த வேண்டும் என்றார் அவர்.

# விவேகமான அணுகுமுறையின் வழி கோவில்கள் உடைபடுவதைத் தவிர்ப்போம்

பாதிக்கப்பட்ட கோவில்களில் ஒன்று

நாட்டில் இந்து ஆலயங்கள் வீற்றிருப்பது மீது சில அரசாங்க ஏஜென்சிகளும் சில அரசியல் வாதிகளும் காட்டும் அலட்சியங்களே, பல இடங்களில் ஆலயங்கள் அகற்றப் படுவதற்குக் காரணமாக இருக்கிறது. ஒரு இந்து ஆலயம் மாற்று இடமோ அல்லது முறையான பேச்சுவார்த்தைகளோ இன்றி இடிக்கப்படும் பொழுது உடைவது, ஆலயம் மட்டுமல்ல நாட்டிலுள்ள இந்துக்களின் சமய நம்பிக்கை.! அங்கே நொறுங்குவது தெய்வச் சிற்பங்கள் மட்டுமல்ல இந்நாட்டு மக்களிடையே நிலவும் ஒற்றுமை என்பதனை அவர்கள் அறிவதில்லை என்கிறார் திரு.நாதன்.

நாட்டு நலனுக்காகச் சிறிது விட்டுக்கொடுக்கும் போக்குடன், பிரச்சனைகளை முறையாக அணுகினால், எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு என்பதையே சுங்கை சீடு ஸ்ரீ மதுரை வீரன் மற்றும் ஸ்ரீ முனீஸ்வரர் நாகேஸ்வரி ஆலயத்திற்குக் கிடைத்த வெற்றி. காட்டுகிறது. கோவிலுக்கு மாற்று நிலமும், உதவித்தொகையும் கிடைத்துள்ளது. என்றார் கோல லங்காட் சுங்கை சீடு வட்டார இந்தியச் சமூகத் தலைவர் திரு.நாதன்.

இவ்வாண்டு ஆரம்பத்தில் மூன்று இந்து கோவில்கள் அமைந்திருக்கும் இடங்களை மேம்பாட்டு நிறுவனம் உரிமை கொண்டாடி அவற்றை அப்புறப்படுத்த நோட்டீஸ் வழங்கியது. இத்தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ டாக்டர் சேவியர் ஜெயக்குமாரின் தலையீட்டின் வழி, அந்த நோட்டீஸ் தற்காலிகமாக ஒத்தி வைக்கப் பட்டு, ஒரு கோவில் அங்கேயே நிலை நிறுத்த பட்டது

சுங்கை சீடு வட்டார இந்தியச் சமூகத் தலைவர் திரு.நாதன் மற்றும் கோலலங்காட் நாடாளுமன்ற உறுப்பினரின் அரசியல் செயலாளரும் கோல லங்காட் நகராண்மைக்கழக உறுப்பினருமான திரு.ஹரிதாஸ் ஆகியோரின் இடைவிடாத முயற்சியாலும், மற்ற 2 கோவில்களின் தலைவர்கள் ஒன்றுபட்டுப் புதிய இடத்திற்கு மாறிச் செல்ல இணங்கினர்.

இந்தக் கோவில்களுக்குத் தலா 10 ஆயிரம் சதுர அடி நிலத்தையும், மாற்று இடத்தில் வழிபாட்டு தலம் அமைக்கவும் ரி.ம 22.500 வழங்கவும் மேம்பாட்டு நிறுவனம் இணங்கியது

சிலாங்கூர் மாநில விதிப்படி ஆலயங்களுக்கு ஒதுக்கப்பட்ட மேற்படி நிலத்தை மேம்பாட்டு நிறுவனம் அதன் திட்டவரைவில் உட்படுத்தி இருக்க வேண்டும். அதன் பின் . அந்த நிலங்களைக் கோல லங்காட் நகராண்மைக் கழகத்தின் வழி, சம்பந்தப்பட்ட கோவில்களின் பெயரில் மாநில அரசின் பதிவேட்டில் இடம் பெறச் செய்ய வேண்டும். ஆலயங்கள் கெஜட் எனப்படும் மாநில அரசின் பதிவேட்டில் இடம்பெற, ஆலய நிர்வாகங்கள் சங்கங்களின் பதிவகத்தில் தங்களைப் பதிந்திருக்க வேண்டும்.

# கோவிட்-19: வேலை நீக்கத்தைத் தடுக்க சட்டம் தேவை எம்.டி.யு.சி. வலியுறுத்து

கோலாலம்பூர், செப் 18- தொழிலாளர்களின் வாழ்வுக்கு பாதுகாப்பும் அவர்களுக்கு சிறப்பான ஊதியமும் அளிக்கும் வகையில் பணியாளர்களை வேலைக்குச் சேர்க்கும் விவகாரத்தில் ஆக்ககரமான கொள்கை அமல் படுத்தப்பட வேண்டும் என்று மலேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (எம்.டி.யு.சி.) வலியுறுத்தியுள்ளது.

கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக ஏற்பட்ட பொருளாதார பாதிப்பிலிருந்து நாடு முதலாளிகள் வேலை நீக்கம் செய்வதை தடுக்கும் வகையில் அவசரகால பணியமர்த்தும் விதிமுறையை அரசாங்கம் அமல் படுத்த வேண்டும் என்று அத்தொழிற்சங்கத்தின் தலைமைச் செயலாளர் ஜே. சோலமன் கூறினார்.

இந்நடவடிக்கையின் மூலம் தொழிலாளர்களின் வேலை பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய முடியும். இந்த இக்கட்டான
காலக்கட்டத்தில் இது போன்ற பாதுகாப்பைத் தான்
தொழிலாளர்கள் எதிர்பார்க்கின்றனர் என்றார் அவர்.

கடந்த 2019ஆம் ஆண்டில் சம்பள உயர்வு அறி-விக்கப்பட்ட போதிலும் தொழிலாளர்கள் இன்னும் சிரமத்தில்தான் உள்ளனர். புள்ளி விபரத் துறையின் அறிக்கையில் குறிப்பிட்டப் படி 2019ஆம் ஆண்டில் 4.4 விழுக்காட்டு சம்பள உயர்வு வழங்கப்பட்டிருந்தாலும் அது 137 வெள்ளியை மட்டுமே பிரதிபலிக்கிறது என்று அவர் அறிக்கை ஒன்றில்
தெரிவித்தார்.

# விவசாயத் துறையில் இளைஞர்களின் ஈடுபாடு அதிகரிப்பு

ஷா ஆலம், செப் 15 நவீன தொழில்நுட்பத்தின் மூலம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் இளைஞர்கள் தற்போது ஆர்வம் காட்டி வருவதாக மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

ஐகோன் அக்ரோ சிலாங்கூர் 2020 திட்டத்தில் பங்கேற்பவர்களில் நாற்பது வயதுக்கும் குறைவானவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது இந்த மாற்றத்தை உணர்த்துவதாக உள்ளது என்று அவர் சொன்னார்.

விவசாயத் துறையில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதிக வருமானத்தை ஈட்டுவதில் இளைஞர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதன் வழி தரமான விவசாய பொருள்களை உற்பத்தி செய்வது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்றார் அவர்.

பெரும்பாலான உற்பத்தி பொருள்கள் உள்நாட்டில் மட்டுமின்றி சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளில் நடைபெற்ற கண்காட்சியிலும் இடம் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இங்குள்ள சிலாங்கூர் விவசாய மேம்பாட்டுக் கழக கட்டிடத்தில் நடைபெற்ற ஐகோன் அக்ரோ சிலாங்கூர் 2020 நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினர்.

மலேசிய புத்ரா பல்கலைக்கழகம், மார்டி எனப்படும் விவசாய மேம்பாட்டு மற்றும் ஆராய்ச்சி கழகம் போன்ற அமைப்புகள் விவசாயத் துறையில் புதிய ஆய்வுகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதால் சிலாங்கூர் அத்துறையில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி வருகிறது என்றும் மந்திரி புசார் குறிப்பிட்டார்.

# 4,000 ஏக்கர் தரிசு நிலம் விவசாய நோக்கத்திற்காக மேம்படுத்தப்படும்

ஷா ஆலம், செப் 7- பரந்த அளவில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக சுமார் 4,000 ஏக்கர் கைவிடப்பட்ட நிலம் மேம்படுத்தப்படும்.

அரசாங்கம், அரசு சார்பு நிறுவனங்கள், அரசு துறைகள் மற்றும் தனியார் வசமுள்ள அந்த நிலங்களை தாங்கள் அடையாளம் கண்டுள்ளதாக விவசாயத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் இஸாம் ஹஷிம் கூறினார்.

விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கு நாம் மேற்கொண்டு வரும் முயற்சிகளில் இதுவும் அடங்கும். நில மீட்பு தொடங்கி விவசாய பொருள்களை சந்தைப்படுத்துவது

ஆட்சிக்குழு உறுப்பினர் ஹிஷாம் ஹஷிம் விவசாயத் திட்டத்தை பார்வையிடுகிறார்

வரையிலான விவகாரங்களை மாநில அரசு கவனித்துக் கொள்ளும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இங்குள்ள செத்தியா சிட்டி மாநாட்டுக்கு மையத்தில் நடைபெற்ற 2021 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் விவசாயம் மீதான கலந்துரையாடலில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் இதனை சொன்னார்.

சம்பந்தபட்ட நிலங்களை மீட்பதில் உள்ள சட்ட அம்சங்களை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளதால் இத்திட்டம் தொடர்பான முடிவை எடுக்க இன்னும் இரு மாதங்கள் ஆகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இளம் வேளாண் தொழில்முனைவோர் திட்டத்தில் அதிகமானோர் ஈடுபட ஃபாமா ஊக்குவிக்கும்

இளம் வேளாண் தொழில் முனைவோர் கடன் உதவித் திட்டத்தில் அதிகமானோர் பங்கேற்பதைச் சிலாங்கூர் மாநிலக் கூட்டரசு விவசாயச் சந்தை வாரியம் ஊக்குவிக்கிறது.

நாட்டிற்கு மிக முக்கியத் துறையாக விளங்கும் உணவு உற்பத்தித் துறையில் இளம் தொழில்முனைவோரின் எண்ணிக்கையை அதிகமாக்க இந்நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக மாநில ஃபாமா இயக்குநர் அப்துல் ரஷிட் பாஹ்ரி கூறினார்.

இத்திட்டத்திற்கு இளம் தொழில்முனைவோரிடமிருந்து ஊக்கமூட்டும் வகையில் ஆதரவு கிடைத்து வருகிறது. இதற்கான விண்ணப்பங்கள் மாநில ஃபாமா வாரியத்தின் வாயிலாக பெறப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படும் என்றார் அவர்.

விவசாயத் துறையில் நீண்ட கால அடிப்படையில் பலன் பெறுவதற்கு ஏதுவாக மேலும்
அதிகமான இளம் தொழில்முனைவோர் இத்திட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்று தெரிவித்தார்.

# குறைந்த வருமானம் பெறுவோருக்காக வெ.10 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் உதவித் திட்டங்கள் ஆட்சிக்குழு உறுப்பினர் கணபதி ராவ் தகவல்

ஷா ஆலம், செப் 14- கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினருக்கு உதவும் வகையில் பத்து லட்சம் வெள்ளி நிதி ஒதுக்கீட்டில் பல்வேறு திட்டங்களை சிலாங்கூர் அரசு மேற்கொண்டு வருகிறது.

கடந்த மார்ச் மாதம் அமல் படுத்தப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணைக்குப் பின்னர் வருமான பாதிப்பை பெரிதும் எதிர்நோக்கி வரும் அத்தரப்பினரை இலக்காக கொண்டு மூன்று திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளதாக பரிவுமிக்க அரசாங்கத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் வீ.கணபதி ராவ் கூறினார்.

கடந்த ஏப்ரல் மாதம் தொடங்கிய முதல் கட்டத் திட்டத்தில் 1,160 சிறு வியாபாரிகளுக்கு தலா 400 வெள்ளி வழங்கப்பட்டது. இது தவிர, 5,000 தோட்டத் தொழிலாளர்களுக்கு சுமார் மூன்று லட்சம் வெள்ளி செலவில் அத்தியாவசிய உணவு பொருட்கள் வழங்கப்பட்டன என்றார் அவர்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக பல திட்டங்களை ஒத்தி வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் நம்மிடம் இன்னும் நிதி ஒதுக்கீடு கைவசம் உள்ளது. நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார மற்றும் சத்துணவுப் பொருள்கள் வாங்குவதற்காக 348,000 வெள்ளி செலவிட்டுள்ளோம் என்று அவர் மேலும் சொன்னார்.

ஊஜோங் பெர்மாத்தாங் வட்டாரத்தில் சுகாதார பாதுகாப்பு மற்றும் சத்துணவு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினர்.

# இவ்வாண்டில் 945 இளைஞர்கள் திவால்

கோலாலம்பூர், செப் 11- இவ்வாண்டு ஜனவரி முதல் ஜூலை வரையிலான காலகட்டத்தில் 18 முதல் 35 வயது வரையிலான 945 இளைஞர்கள் திவாலானதாக அறிவிக்கப்பட்டதாக பிரதமர் துறை துணையமைச்சர் டத்தோ ஷாபுடின் யாஹ்யா தெரி-வித்தார்.

திவாலானவர்களில் 100 பேர் 31 முதல் 35 வயது வரையிலானவர்கள் என்பதை மலேசிய திவால் துறையின் பதிவுகள் காட்டுவதாக அவர் தெரிவித்தார்.

திவால் எண்ணிக்கையை குறைப்பதற்காக விழிப்புணர்வு பிரசாரம் உள்பட பல்வேறு நடவடிக்கைகளை தாங்கள் எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

மேலவையில் இன்று கேள்வி நேரத்தின்போது துணையமைச்சர் இவ்வாறு கூறினார். திவாலான இளைஞர்களின் எண்ணிக்கை மற்றும் கோவிட்-19 காரணமாக திவாலானவர்களுக்கு உதவ அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து அவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

இது குறித்து மேலும் விளக்கிய துணையமைச்சர், ஏ.பி.கே.பி. எனப்படும் கடன் நிர்வாக ஆலோசனை நிறுவனம் வாயிலாகவும் இளையோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக சொன்னார்.

# நகராண்மைக்கழக அந்தஸ்து பெற்றது கோல லங்காட் மாவட்ட மன்றம்

பந்திங், செப் 10- கோல லங்காட் மாவட்ட மன்றம் சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் அவர்களின் ஆசியுடன் நகராண்மைக்கழக அந்தஸ்தைப் பெற்றது.

இங்குள்ள டேவான் ஸ்ரீ ஜூக்ரா மண்டபத்தில் நடைபெற்ற இந்த வரலாற்றுப்பூர்வ நிகழ்வுக்குச் சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தலைமை தாங்கினார். கோல லங்காட் நகராண்மைக்கழகத் தலைவர் டத்தோ அமிருள் அஜிசான் முகமது ரஹிம் இந்நிகழ்வில் உடனிருந்தார்.

மாவட்ட மன்றத்தை நகராண்மைக் கழகமாக்கும் நடவடிக்கைகள் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும், கடந்த மார்ச் மாதம் இதற்கான அந்தஸ்து கிடைத்தாகவும் டத்தோ அமிருள் தமது உரையில் குறிப்பிட்டார்.

கோல லங்காட் மாவட்ட மன்றத்தை நகராண்மைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்தும் திட்டம் கடும் உழைப்புக்குப் பின்னரே சாத்தியமானது. இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மாநில அரசையும் வீடமைப்பு மற்றும் ஊராட்சித் துறை அமைச்சையும் இணங்கச் செய்வதற்குப் பல ஆண்டுகாலம் பிடித்தது என்றார் அவர்.

கோல லங்காட் மாவட்ட மன்றம் நகராண்மைக்கழக அந்தஸ்தைப் பெற்றதைத் தொடர்ந்து வசீகரம், நல்லிணக்கம் மற்றும் விவேகம் என்ற சுலோகமும் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறம் கொண்ட புதிய சின்னமும் அறிமுகம் செய்யப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் புதிய அந்தஸ்தின் வாயிலாக அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது, சுற்றுலா மையங்களை மேம்படுத்துவது மற்றும் வரலாற்று இடங்களைப் பராமரிப்பது உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைத் தாங்கள் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# பத்து கேவ்ஸ், இந்தியன் செட்டில்மெண்ட் குடியிருப்பு பிரச்சினைக்கு அடுத்தாண்டிற்குள் தீர்வு

கோம்பாக், செப் 17- பத்து கேவ்ஸ்,இந்தியன் செட்டில்மெண்ட் குடியிருப்பைச் சேர்ந்த 25 குடும்பங்களை மறு குடியேற்றம் செய்யும் பணிகள் அடுத்தாண்டிற்குள் முற்றுப் பெறும் என்று மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

வெள்ளத் தடுப்பு பணிக்காக நிலத்தை கையகப்படுத்தும் திட்டத்திற்கு அப்பகுதி மக்களின் ஒப்புதல் பெறப்பட்டதைத் தொடர்ந்து இந்த மறுகுடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஆற்றோரத்தில் குடியிருக்கும் மக்களை ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்டபடி இவ்வாண்டு இறுதி அல்லது அடுத்தாண்டு வாக்கில் வேறு இடத்திற்கு மறு குடியேற்றம் செய்யத் திட்டமிட்டுள்ளோம் என்றார் அவர்.

மலேசிய தினத்தை முன்னிட்டு இங்குள்ள இந்தியன் செட்டில்மெண்ட் குடியிருப்பு பகுதியில் துப்புரவு இயக்கத்தை தொடக்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினர்.

## மாநில அரசுக்கு எதிராக பொய்ச் செய்திகள் மந்திரி புசார் வேதனை

கோம்பாக், செப் 17- பொய்யான செய்திகள் பரப்பபடும் சம்பவங்கள் சிலாங்கூர் அரசுக்கு பெரும் சவாலாக விளங்குவதாக மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இது போன்ற செய்திகள் பொது மக்கள் மத்தியில் தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுங்கை பெலெம்பாஸ் விவகாரம், பள்ளிவாசல் மற்றும் சூராவ் பணியாளர்களுக்கான சம்பள ஒருங்கிணைப்பு உள்பட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக மாநில அரசு மீது சில தரப்பினர் பலவிதமான அவதூறுகளை பரப்பி வருவதாக அவர் சொன்னார்.

இவ்விவகாரங்களுக்கு தீர்வு காணப்பட்ட போதிலும் பொறுப்பற்ற சில தரப்பினர் இவற்றை வைத்து அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என்றார் அவர்.

சில தரப்பினர் தவறான செய்திகள் மூலம் நொடிக்கு நொடி மாநில அரசுக்கு எதிராக அவதூறு பரப்பி வருகின்றனர். எனினும், பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதிப்படி மாநில அரசு தனது கடமையை முறையாக ஆற்றி வருகிறது என்றார் அவர்.

இங்குள்ள சியான்தான் மண்டபத்தில் நடைபெற்ற மலேசிய தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் கூறினர்.

இது போன்ற சவால்கள் மாநில அரசுக்கு மேலும் உத்வேகத்தை அளித்துள்ளதாக கூறிய அவர், மக்கள் நலன் சார்ந்த விஷயங்கள் மீது கடப்பாடு கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மக்கள் தொகை கணக்கெடுப்பில் இந்திய சமூகம் தவறாது பங்கெடுக்க வேண்டும்

ஷா ஆலம், செப் 17- மக்கள் தொகை மற்றும் குடியிருப்பு கணக்கெடுப்பை அரசாங்கம் தற்போது நடத்தி வருகிறது.

பத்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த கணக்கெடுப்பு இம்முறை கடந்த ஜூலை மாதம் 7ஆம் தேதி முதல் செப்டம்பர் 30 ஆம் தேதி வரை மேற்கொள்ளப்படுகிறது.

இது வரை மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இந்திய சமூகத்தின் பங்கேற்பு மிகவும் குறைவாக உள்ளதாக அண்மையில் பெர்னாமா வெளி-யிடப்பட்ட செய்தி கூறுகிறது

இந்திய சமூகத்தைப் பொறுத்தவரை இந்த கணக்கெடுப்பு மிகவும் முக்கியமானது.கல்வி, பொருளாதாரம், வேலை வாய்ப்பு,சமூகவியல் துறைகளில் நமது உரிமைகள் நிலைநாட்டப்படுவதற்கு நமது எண்ணிக்கையே அடித்தளமாக விளங்குகிறது.

தொடக்கத்தில் பத்து விழுக்காடாக இருந்த இந்திய சமூகத்தின் மக்கள் தொகை இப்போது ஏழு விழுக்காடாக குறைந்து விட்டது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பை அலட்சியம் செய்வதன் மூலம் நமக்கு கிடைக்க வேண்டிய வாய்ப்புகளையும் நமது சந்ததியினரின் எதிர் காலத்தையும் பாழடித்து விடக்கூடாது.

மக்கள் தொகை கணக்கெடுப்பில் அலட்சியம் வேண்டாம்.அதன் அவசியம் உணர்ந்து செயல் படுவோம்

## சரவணன் ஷா ஆலம் மாநகர் மன்ற உறுப்பினரானார்

ஷா ஆலம், கெஅடிலான் கட்சியின் ஷா ஆலம் தொகுதி இளைஞர் பிரிவுத் தலைவரும் கட்சியின் தேசிய இளைஞர் பிரிவு ஆட்சி மன்ற உறுப்பினருமான சரவணன் செல்வராஜூ ஷா ஆலம் மாநகர் மன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார்.

ஷா ஆலம் மாநகர் மன்றத் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் டத்தோ பண்டார் டத்தோ ஹரிஸ் காசிம் முன்னிலையில் அவர் பதவி உறுதி மொழி எடுத்துக் கொண்டார்.

தமக்கு இப்பதவி வழங்கப்பட்டதானது கட்சியின் இளைஞர் பிரிவுக்கும் சமுதாயத்திற்கும் கிடைத்த அங்கீகாரமாகத் தாம் கருதுவதாகச் சரவணன் குறிப்பிட்டார்.

நகர்ப்புற மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் நகர்ப்புற விவசாயத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்தப் பதவி பெரிதும் உதவும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் சொன்னார்.

தம் மீது நம்பிக்கை வைத்து இந்தப் பதவிக்குச் சிபாரிசு செய்த மாநில மந்திரி புசார் அமிருடின் ஷாரி மற்றும் செனட்டர் யாக்கோப் சபாரிக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

# 2021 வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் நல்வாழ்வுக்கு முன்னுரிமை

ஷா ஆலம், செப் 14- வரும் அக்டோபர் மாதம் 30 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டவிருக்கும் சிலாங்கூர் மாநில வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் நல் வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று பரிவுமிக்க அரசாங்கத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் வீ. கணபதிராவ் கூறினார்.

கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கு ஏதுவாக இந்த பரிந்துரை முன்வைக்க பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கோவிட்-19 நோய்த் தொற்று ஏற்படுத்திய விளைவுகளையும் அதனால் மாநிலத்தின் வருமானம் குறைந்துள்ளதையும் நாம் உணர்ந்துள்ளோம். ஆகவே, வரும் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம் என்றார் அவர்.

கடந்தாண்டில் வரவு செலவு திட்டத்திற்காக சிலாங்கூர் அரசு 233 கோடி வெள்ளியை அங்கீகாரித்தது. அதில் 113 கோடி வெள்ளி அதாவது 48.56 விழுக்காட்டுத் தொகை மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் 120 வெள்ளி அதாவது 51.44 விழுக்காடு நிர்வாக செலவுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை சமாளிக்கும் விதமாக 12 கோடியே 77 லட்சத்து 80 ஆயிரம் வெள்ளி மதிப்புள்ள ஏழு திட்டங்களை மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த மார்ச் மாதம் 20 ஆம் தேதி அறிவித்திருந்தார்.

# கடல் பெருக்கு அபாயம் விழிப்பு நிலையில் எம்.பி.கே.

ஷா ஆலம், செப் 14- கடல் பெருக்கு காரணமாக கிள்ளான் மாவட்டத்தில் உள்ள 11 இடங்கள் பாதிக்கப்படும் என்று கணிக்கப்பட்டுள்ள வேளையில் அந்த இயற்கை பேரிடரை எதிர் கொள்ள கிள்ளான் நகராண்மைக் கழகம் முழு விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பகுதிகளில் இரு குழுக்கள் 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருவதாக நகராண்மைக் கழகத்தின் துணை அமலாக்க பிரிவு இயக்குநர் ஷாருள் அஸ்ரி அப்துல் மஜீத் கூறினார்.

இந்த கடல் பெருக்கு காரணமாக கம்போங் தோக் மூடா, சுங்கை பினாங் பூலாவ் இண்டா, பண்டமாரான், கிள்ளான் துறைமுகம், கம்போங் சுங்கை செர்டாங், செமென்தா,சுங்கை கிராமாட், கம்போங் பிரம்பாட், வட துறைமுகம், தெலுக் கோங், பூலாவ் கித்தாம் ஆகிய பகுதிகள் பாதிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த பேரிடரை சமாளிக்க நான்கு துயர் துடைப்பு மையங்கள் திறக்கப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், உதவி தேவைப்படுவோர் 03- 33716700 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

இந்த கடல் பெருக்கு இம்மாதம் 19 மற்றும் 20ஆம் தேதிகளிலும் அடுத்த மாதம் 17 முதல் 19ஆம் தேதி வரையிலும் நவம்பர் மாதம் 15 மற்றும் 16 ஆம் தேதிகளிலும் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கடல் பெருக்கின் போது 5.8 மீட்டர் உயரத்திற்கு அலைகள் உயரும்.

மூதாட்டி ஒருவருக்கு சுகாதார பாதுகாப்பு மற்றும் சத்துணவு பொருட்களை ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதி ராவ் வழங்குகிறார்

## உதவிப் பொருள் அன்பளிப்பு அரசுக்கு பொதுமக்கள் நன்றி

கோல சிலாங்கூர், செப் 14- சுகாதார பாதுகாப்பு பொருள்கள், சத்துணவு, முகக் கவசம், கிருமி நாசினி போன்ற பொருள்களை சிலாங்கூர் அரசு தங்களுக்கு வழங்கியது குறித்து பொதுமக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்த உதவிகள் தங்களின் சுமையை பெரிதும் குறைக்க உதவியதாக நோர் ரிலா முகமது நோர் (வயது 63) கூறினார்.

மாநில அரசு வழங்கும் ஒவ்வொரு உதவியும் எனக்கு மிகவும் தேவையானதாக உள்ளது. அரசின் பரிவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் அவர்.

முன்னதாக அவர், பரிவுமிக்க அரசாங்கத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. கணபதிராவிடமிருந்து உதவிப் பொருள்களைப் பெற்றுக் கொண்டார்.

# ஹலால் ஐ.கே.எஸ். வழிநடத்துநர் ஆகுங்கள்

நிலை 1 மற்றும் 2 மட்டுமே. இக்கட்டணம் பி.கே.பி.பி. காலக்கட்டம் வரை மட்டுமே என்பதோடு நிர்வாகத் தரப்பின் மாற்றங்களுக்கும் உட்பட்டது

அசல் கட்டணம் :
நிலை 1 RM250
நிலை 2 RM650
*தற்போது இலவசம்!
குறிப்பிட்ட இடங்கள் மட்டுமே
விரைந்து பதியுங்கள்

IMFAN
INTERNATIONAL MUSLIM FRIENDLY AFFILIATED NETWORK

HALAL INTERNATIONAL SELANGOR

சிலாங்கூர் மாநில அரசின் முயற்சியினால் சிலாங்கூர் அனைத்துலக ஹலால் அமைப்பினால் உருவாக்கப்பட்ட திட்டமான இம்ஃபான் கீழ்க்கண்ட வாய்ப்புகளை வழங்குகிறது:

- ஹலால் கோட்பாட்டின் வாயிலாக தொழில்முனைவோர் மேம்பாடு
- ஹலால் வர்த்தக வழக்கங்களை அறிந்து கொள்ளல்
- வர்த்தகம் புரிவதற்காக ஹலால் சான்றிதழ் வாய்ப்புகளுக்கான மதிப்பீடு
- ஜாக்கிமிடமிருந்து ஹலால் சான்றிதழ் பெறுவதற்கு ஆதரவு

## உங்கள் ஹலால் சான்றிதழ் வாய்ப்பினை சாத்தியமாக்குங்கள்

### தகுதி பெற்ற தொழில் முனைவோர்

**குறு தொழில்முனைவோர்**

- ஐந்துக்கும் குறைவான ஊழியர்கள் அல்லது RM300,000க்கும் மேற்போகாத ஆண்டு விற்பனை

**சிறு தொழில்முனைவோர்**

- தயாரிப்புத் துறையில் 5 முதல் 75 வரையிலான ஊழியர்கள் அல்லது RM300,000 முதல் RM1,5 மில்லியன் வரையிலான ஆண்டு விற்பனை
- சேவை மற்றும் இதரத் துறைகளில் 5 முதல் 30 தொழிலாளர்கள் அல்லது சேவை மற்றும் இதரத் துறைகளில் RM300,000 முதல் RM3 மில்லியன் வரையிலான விற்பனை

**நடுத்தர தொழில்முனைவோர்**

- தயாரிப்புத் துறையில் 75 முதல் 200 வரையிலான தொழிலாளர்கள் அல்லது RM1,5 மில்லியன் முதல் RM50 மில்லியன் வரையிலான ஆண்டு விற்பனை
- சேவை மற்றும் இதரத் துறைகளில் 30 முதல் 75 வரையிலானத் தொழிலாளர்கள் RM3 மில்லியன் முதல் RM20 மில்லியன் வரையிலான விற்பனை

### பயிற்சி அட்டவணை
செப் & அக். 2020

15 செப் 2020 (செவ்வாய்க்கிழமை) 10.00 காலை

23 செப் 2020 (புதன்கிழமை) 10.00 காலை

6 அக் 2020 (செவ்வாய்க்கிழமை) 10.00 காலை

14 அக் 2020 (புதன்கிழமை) 10.00 காலை

21 அக் 2020 (புதன்கிழமை 10.00 காலை

29 அக 2020 (வியாழக்கிழமை) 10.00 காலை

### தகுதியுள்ள துறைகள்*

- உணவு பானங்கள்
- அழகு சாதனங்கள் மற்றும் மேனி பராமரிப்பு பொருள்கள்
- தளவாடம்
- மருந்தியல்
- பயனீட்டுப் பொருள்கள்
- உணவு மையங்கள்/ வீடுதி/ வீடுதி சமையலறை கேட்டரிங்
- அசல் பொருள் தயாரிப்பு துறை

* ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கட்டத்தில் உள்ள, முஸ்லீம்களின் நம்பிக்கையை பாதிக்கக்கூடிய மற்றும் பொதுமக்களுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய பொருள்கள் மற்றும் சேவைகள் நீங்கலாக

பதிவு செய்வதற்கு
கியு.ஆர். ஸ்கேன் செய்யவும்

மேல் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்

Halal International Selangor - Tel : 03 - 55108080/8118/8228 atau WhatsApp : 013 - 8017076 Email : info@halalinternationalselangor Facebook : Halal International Selangor

Diterbitkan oleh Kerajaan Negeri Selangor Daru Ehsan-Dicetak oleh POLARVISTA Sdn.Bhd. 15, Jalan 6/118C, Desa Tun Razak, 56000 Cheras, Kuala Lumpur. Tel: 03-91731434 Fax-03-91731412